02.04.2025 S.C.No.138 of 2017 P.W. 25 – Saravanakumar

(A1 and A6 absent. And their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A2 to A5 present)

விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.47 P.M.

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Crl.M.P.No.835/2025 உத்தரவு நாள் 10.03.2025 அடிப்படையில் இந்த சாட்சியை விடுபட்ட சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மீண்டும் வரவழைக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்களை கீழ்க்கண்டவாறு அரசு தரப்பில் குறியிடப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

06.07.2015 அன்று சிபிசிஐடி டிஐஜி Medical report கேட்டதற்கிணங்க Medical report with case sheets தரப்பட்டது. Medical report வுடன் சேர்த்து மொத்தம் ஐந்து தாள்கள் உள்ளன. அது அ.த.சா.ஆ.78 ஆக குறியிடப்படுகிறது. அந்த Medical report case sheet–டோடு அ.த.சா.ஆ.48 மற்றும் எ.த.சா.ஆ.3 ஆகியவற்றை அந்த case sheet–டோடுதான் அனுப்பப்பட்டது.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: சிபிசிஐடி கேட்டதற்கிணங்க என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் கேட்டதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் இருக்கும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை காட்டுங்கள் ?

ப: Chief Medical officer க்கு கடிதம் வந்தது. அவருடைய அறிக்கையுடன் என்னுடைய மருத்துவ ஆவணங்களை இணைத்துள்ளேன்.

கே: Chief Medical Officer க்கு சிபிசிஐடி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தை காட்டுங்கள்?

ப: அது நீதிமன்றத்தில் பட்டியல் ஆவண எண் 51 ல் உள்ளது.

கே: Chief Medical Officer கையெழுத்திட்டுள்ள கடிதத்தில் சிபிசிஐடி அலுவலகத்திற்கு எத்தனை பக்கங்கள் உள்ள ஆவணம் தரப்பட்டுள்ளன?

ப: எத்தனை பக்கங்கள் என்ற தகவல் அதில் இல்லை.

கே: கடித நாள் 06.07.2015 ல் Chief Medical Officer அசல் ஆவணங்களை தந்ததாக இருக்கிறதா என்றால் ?

ப: ஆம். இருக்கிறது.

கே: எ.த.சா.ஆ.3 ல் (பட்டியல் ஆவண எண் 51)ல் 9 வது பக்கத்தில் தங்களது கையொப்பமோ அல்லது Chief Medical Officer ன் கையொப்பமோ இருக்கிறதா என்றால் ?

ப: இல்லை.

கே: எ.த.சா.ஆ.3 ல் (பட்டியல் ஆவண எண் 51)ல் 10 வது மற்றும் 11 வது பக்கத்தில் உங்களது கையொப்பமோ அல்லது Chief Medical Officer ன் கையொப்பமோ இருக்கிறதா என்றால்?

ப: இல்லை.

கே: அதுபோலவே 12 வது பக்கத்திலும் உங்கள கையெழுத்தோ அல்லது Chief Medical Officer ன் கையெழுத்தோ இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட ஆவணம் 51 ல் எ.த.சா.ஆ.3 ல் பக்கம் 10, 11, 12 ஆகிய பக்கங்களில் உங்கள் மருத்துவமனையின் முத்திரை ஏதாவது உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 06.07.2015 தேதியிட்ட Chief Medical Officer ன் கையெழுத்திட்ட கடிதத்தில் பக்கம் 9, 10, 11, 12 ஆகிய பக்கங்களில் மருத்துவமனையின் முத்திரையோ அல்லது மருத்துவரின் கையொப்பமோ இல்லை என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா ?

ப: அவ்வாறு எழுதப்படவில்லை.

கே: மேற்கண்டவாறு மருத்துவமனையின் எந்த முத்திரையும் எவருடைய கையொப்பமோ இல்லாத ஆவணங்களில் Chief Medical Officer–ன் கடிதத்தில் இணைத்தது யார் ?

ப: தெரியாது.

கே: எ.த.சா.ஆ.3 ல் பக்கம் 11 என்று குறியிடப்பட்டுள்ள இரண்டாவது Column ல் ஷமீல் பாஷா Absconding ஆனது குறித்து குறிப்புகள் எழுதப்பட்டுள்ளதா என்றால் ?

ப: ஆம். எழுதப்பட்டுள்ளன.

கே: எ.த.சா.ஆ.3 ல் பக்கம் 11 ல் இரண்டாவது வரிசையில் மூன்றாவது Column ல் at 07.30 P.M. Patient found in male ward என்று இருக்கிறது என்றால்?

ப: இருக்கிறது.

கே: அ.த.சா.ஆ.48 ல் பக்கம் 7 என்று குறியிடப்பட்டுள்ள வெள்ளைத்தாளில் "Patient was in male ward during morning rounds to cancel absconding" என்று எழுதி 20 ம் தேதி 06 ம் மாதம் என்று தேதியிட்டு 04.00 P.M. என எழுதப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.48 ல் 7 வது பக்கம் என்று குறியிடப்பட்டுள்ள வெள்ளைத்தாளில் உங்களுடைய மருத்துவமனை முத்திரை ஏதாவது உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: எ.த.சா.ஆ.6 ல் 5 வது தாளில் Nurse report chart ல் இரண்டாவது வரிசையில் 20/6 என்றும் எ.த.சா.ஆ.3 ல் பக்கம் 11 என்று எழுதப்பட்ட Nurce report chart ல் 20/6/15 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 5 வது தாளில் Column 2 மற்றும் 3 ல் எந்த குறிப்புகளும்

காணப்படவில்லை. ஆனால் எ.த.சா.ஆ.3 ல் பக்கம் 12 என்று குறிப்பிட்டுள்ள Nurce report ல் பல்வேறு தகவல்கள் எழுதப்பட்டுள்ளன என்றால் ?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 5 வது தாளில் தலைப்பில் Diagnosis என்ற இடத்தில் Assault என்றும் எ.த.சா.ஆ.3 ல் 3 வது Column Dioagnosis என்று எழுதப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 5 வது தாளில் Nurse report chart ல் name என்ற இடத்தில் ஷமீல் பாஷா என்று எழுதியுள்ள கையெழுத்துக்கள் வெவ்வேறானது என்றால் ?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 5 வது தாளில் Nurse chart ல் sex என்றும் IP No.என்றும் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் வெவ்வேறானவை என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 11 வது தாளில் தலைப்பில் 20.06.2015 என்று எழுதியிருக்கும் இடத்தில் Timings ஏதும் குறிப்பிடவில்லை என்றும் அ.த.சா.ஆ.48 ல் 7 வது பக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ள தாளில் தலைப்பில் 11.00 A.M. என்றும் வெவ்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன என்றால் ?

ப: சரிதான்.

கே: 20.06.2015 தேதியிட்டு எ.த.சா.ஆ.6 ல் 11 வது தாளில் To cancel abscodning என்று எழுதப்பட்டுள்ள வாசகத்திற்கு வலதுபுறத்தில் எதுவும் எழுதப்படவில்லை என்றாலும் அ.த.சா.ஆ.48 ல் 7 வது தாளில் To cancel absconding என்ற எழுதப்பட்டுள்ள வலதுபுறத்தில் வேறு சில மருந்துகள் கொடுத்ததாக தகவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 11 வது தாளில் To cancel absconding என்று எழுதி அதற்கு கீழே சுருக்கொப்பமிட்டதில் 20/6 என்று எழுதி அதற்கு கீழாக 04.00P.M. என அடித்தல் திருத்தலுடன் எழுதியுள்ளது என்றாலும் அ.த.சா.ஆ.48 ல் 7 வது பக்கம் என்று குறிப்பிட்டுள்ள தாளில் To cancel absconding என்று எழுதி சுருக்கோப்பமிட்டு 20/6 என்று தேதியிட்டு 04.00 P.M. என்று அடித்தல் திருத்தலுடன் எழுதப்பட்டு Duty MO என்று அ.த.சா.ஆ.48 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 21.06.2015 என்று எழுதி அடிக்கோடிட்டு எழுதப்பட்டுள்ள தகவல்களுக்கும் அ.த.சா.ஆ.48 ல் 21.06.2015 என்று எழுதி அடிக்கோடிட்ட தகவல்களுக்கும் எண்ணிலடங்கா வேறுபாடுகள் உள்ளன என்றால்?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.48 ல் 7 வது பக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ள தாளில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் தங்களால் எழுதப்படவையா?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.48 ல் 8 வது பக்கம் என்று பச்சை மையில் எழுதி 22/6 என்று அடிக்கோடிட்டு அதன் கீழ் 11.30 A.M. என்று எழுதி பல்வேறு தகவல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் எ.த.சா.ஆ.6 ல் 11 வது தாளிற்கு பின்பக்கம் எவ்வித தகவல்களும் எழுதப்படவில்லை என்றால் ?

ப: அ.த.சா.ஆ.48 ல் உள்ள 8 வது பக்கத்தில் பச்சை மையில் எழுதியது நான்தான்.

கே: 22.06.2015 அன்று 11.30 க்குதான் எழுதினேன் அதற்கு முன்பாக நான் எதையும் எழுதவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.2 ல் 11 வது தாளில் மேலிருந்து 5 வரிக்கு கீழே ஷமீல் பாஷா Patient absconded on 20.06.2015 at 11.00 A.M. police intimation given என்று இருக்கிறது. அந்த குறிப்பு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய செவிலியர் மாலை 07.00 மணிக்கு Handed over to night duty nurse என்று எழுதி கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார் என்ற குறிப்பு இருக்கிறது என்றால் ?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 4 வது தாளில் absconded என்ற இடத்தில் வட்டமிட்டு 20.06.2015 11.00 A.M. Abscond ஆனதாக குறிப்பிட்டுள்ளது என்றும் அ.த.சா.ஆ.48 ல் பக்கம் 4 என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தில் absconded என்பது சிவப்பு மை கொண்டு வட்டமிட்டு 20.06.2015 11.00 A.M. என்பதை குறுக்கு கோடிட்டு அழித்துவிட்டு அதற்கு கீழாக 22.06.2015 என்று சிவப்பு மை கொண்டு எழுதப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: ஒரு நோயாளி மருத்துவமனையிலிருந்து abscond ஆகி திரும்ப அந்த நோயாளி 6 மணி நேரத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான பதிவுகளை Case sheet ல் இணைக்கப்படவேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: Abscond ஆன நோயாளி திரும்ப கிடைத்துவிட்டால் அது குறித்து காவல் நிலையத்திற்கு Intimation கொடுக்க வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.78 ல் பக்கம் 14 என்று எழுதப்பட்டுள்ள Discharge summary அசல் (Original) இல்லை ஜெராக்ஸ்தான் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட Discharge summary Attested என்றும் இதில் சான்றிடப்படவில்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: சிபிசிஐடி விசாரித்தார்களா என்றால்?

ப: விசாரித்தார்கள்.

கே: தங்களுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 06.07.2015 அன்று Chief Medical Officer கொடுத்த கடிதத்தை ஆவணத்தோடு இணைத்து சிபிசிஐடியிடம் கொடுத்தேன் என கூறியிருக்கிறீர்களா?

ப: அவ்வாறு எதுவும் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் இல்லை.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

என்னை சிபிசிஐடி போலீசார் 03.07.2016 அன்று விசாரித்தார்கள். 19.06.2015 அன்று நான் பணியில் இருந்தேன். அடுத்த இரண்டு நாட்கள் நான் பணியில் இல்லை. Post duty off, Week off-ல் சென்றேன். திரும்ப 22.06.2015 அன்று நான் பணிக்கு வந்தேன்.

Wound certificate மற்றும் I.P.எண் நான்தான் போட்டுள்ளேன். ஆம்பூர் மருத்துவமனையில் Wound certificate எண் 90 என்றும் I.P.No. 4913. மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்கும்போது தரும் எண்தான் 4913 ஆகும். மருத்துவமனையிலிருந்து referral வரும்போது இதே I.P.No. 4913 எண்தான் அதற்கும் வரும் என்றால் சரிதான்.

ஒரே நோயாளி வேறொரு சமயத்தில் காயப்பட்டிருந்தால் அவர் மீண்டும் உள்நோயாளியாக அட்மிட் செய்யப்பட்டால் புதிய I.P.No.

கொடுக்கப்படும் என்றால் சரிதான். வேலூர் மருத்துவமனையில் வேறு ஒரு சம்பவத்தில் அடிப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டால் வேறு ஒரு எண் தரப்படும் என்றால் சரிதான்.

இரண்டு நாட்கள் நான் மருத்துவமனையில் இல்லாமல் வெவ்வேறு மருத்துவர்கள் அந்த நாட்கள் இருந்ததினால் அதைப்பற்றி குறிப்பிட்டு சொல்வதற்கு தங்களுக்கு எந்தவித தகுதியும் இல்லை அப்படி தங்களால் கூறப்பட்டுள்ள அனைத்து விஷயங்களும் அதாவது 20.06.2015, 21.06.2015 ஆகிய தேதிகளில் கூறப்பட்ட அனைத்து தகவல்களும் சிபிசிஐடி அதிகாரிகளால் Cooked up செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட Embellishment document என்றும் தகவல்களும் Tutted தகவல்கள் என்றும் தங்களால் தற்போது சொல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்திற்கும் நீங்கள் Author அல்ல என்றும் தாங்கள் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.25 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.02 18:12:57 +0530